# THE MESSAGE OF THE HOUR OUTREACH

CALEB JOSHUA
Tele : 04630 456157

"HOREB"
SRIVAIKUNTAM – 628 601
THOOTHUKUDI DIST.

கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கு :

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், இரக்கமும், சமாதானமும் சத்தியத்தோடும் அன்போடுங் கூட பெருகக்கடவது.

1. இந்நாட்களில் பாஸ்டர்.டேனியல் கிறிஸ்டியான் (**Pastor.Daniel Christian, P.B. No.7791, Mulund West, Mumbai-400 080**) என்னைக் குறித்தும், என்னால் தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து குறிப்புகள் எடுத்துத் தொகுக்கப்பட்ட **தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் அந்நிய அக்கினி ஸ்தம்பம்** செய்தித் தொகுப்புக்களை குறித்தும் விமர்சித்து வெளியிட்டுள்ளச் **சுற்றறிக்கை**யை நீங்கள் தியானித்திருப்பீர்கள். இதுவரை இந்தச் சுற்றறிக்கை உங்களுக்குக் கிடைக்காவிட்டால் நான் மேற்கூறியுள்ள அவருடைய விலாசத்துக்கு கடிதம் எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

2. இங்கு, அவரால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு கொண்டுவரப்பட்டு, அமோக விற்பனையைக் கண்டதினால் அவருடைய செல்வாக்கு மற்றும் பொருளாதார நிலையை உயர்த்திய அந்நிய அக்கினி ஸ்தம்பம் மற்றும் அவரது புதியத் தொழிலாகிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து நான் எழுதியதற்கு அவர் கொடுத்துள்ள விமர்சனத்திற்கு விளக்கம் எழுதுகிறேன்.

3. ஒரு பக்கம் பாஸ்டர்.டேனியேலின் **அந்நிய அக்கினி ஸ்தம்பம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**, மறுபக்கம் பாஸ்டர். ஜெயராஜ்ஜுடைய **1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது.** இனி ஐந்து வகை ஊழியங்கள் நம் மத்தியில் கிடையாது, இனி ஞானஸ்நானம் தேவையில்லை, இனி கர்த்தருடைய இராப்போஜனம் தேவையில்லை, இனி நான் நானல்ல மாறாக நான் கிறிஸ்து போன்ற நூதன போதகங்கள், இவைகளை ஆவிக்குரிய ரீதியில் நிதானித்து, இப்படிப்பட்ட உபதேசங்களுக்குச் செவிகொடாதீர்கள் என விசுவாசிகளை எச்சரித்து எழுதி வருகிறேன். இதனால் நான் பல வழிகளில் சத்துருவால் நெருக்கப்படுகிறேன். நான் அவனை எதிர்க்கும்போது அவனும் என்னை எதிர்க்கிறான் அல்லவா! இதனால் தேவனுடைய வார்த்தையோடும், தீர்க்கதரிசியின் செய்தியோடும் என் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தக் கூடாதபடிக்கு பற்பல பிரச்சனைகள் ஒன்றன்பின் ஒன்றாக உருவெடுத்து என் கவனங்கள் சிதறடிக்கப்படுகிறது. நான் எல்லாப்பக்கத்திலும் நெருக்கப்படுகிறேன், ஆனாலும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைகிறேன், ஆனாலும் மனமுறிவடைகிறதில்லை. கர்த்தர் எனக்குக் கொடுத்த உக்கிராணப் பொறுப்பை நிறைவேற்றுவதில் என்றுமே தவறமாட்டேன். ஏனென்றால் என்னில் இருக்கிறவர், என்னை என்றுமே தவறவிடமாட்டார். ஆதலால் கர்த்தர் எனக்குக் கொடுத்த பெலத்தின்படி முதலில் ஆவிக்குரியக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதுகிறேன். தனிப்பட்ட முறையில் பாஸ்டர்.டேனியேல் என்னைக் குறித்து தன் மனம்போன போக்கில் எழுதிய கட்டுக் கதைகளுக்குத் தகுந்த பதிலைத் தனியாக வெளியிடுகிறேன்.

4. மேலும், இந்த விவகாரங்களுக்கு இதுவே எனது ஆவிக்குரிய கடைசி விளக்கம். ஆதலால் நான் முன்பும், இப்பொழுதும் எழுதியுள்ள விளக்கங்களை அவருடைய சுற்றறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்து நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள்.

5. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடது புறமாய்ச் சாயும்போதும் : வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தைகளை உங்கள் காதுகள் கேட்க அவைகளை கர்த்தர் விருத்தசேதனம் செய்ய, சத்திய ஆவி உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த ஜெபிக்கிறேன், எழுதுகிறேன்.

6. **உற்பத்தி செய்யப்பட்ட அந்நிய அக்கினி ஸ்தம்பம்**. இந்நாட்களில், இக்கடைசிகாலச் செய்தி என்ற போர்வையின் கீழ், அக்கினி ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் எனக் கூவி, பலகோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை நல்ல விலைக்கு மார்க்கெட்டிங் செய்து, அமோக வசூலைக் கண்டு, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல், தன்னை ஐந்து வகை ஊழியங்களின் பெயர்களில் அழைத்துக் கொண்டும், ஊழியத்தின் பெயரில் தனது பெயருக்கும், புகழுக்கும் ஊழியம் செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சித்து பணம் சம்பாதித்து சுகபோகமாக வாழ்ந்து வருபவர் பாஸ்டர்.டேனியேல் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவர் தன் சுய வருமானத்தில் ஆடம்பரமாக வாழ்ந்தால் அதைக்குறித்து எதுவும் எழுதுவதற்கு எனக்குத் தகுதி கிடையாது. ஆனால் இங்கு காரியங்கள் மாறாக இருப்பதினால் எழுதவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானேன். வலதுகைக்கும், இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத அநேக மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்களே!.

7. நான் சகோ.எட் பிஸ்கலோடு (கனடா) நல்ல உறவு வைத்திருந்தேன். இந்தியாவில் இவரது ஆடம்பர செலவுகளை நான் கண்டிக்க ஆரம்பித்தேன். இந்தியாவுக்கு வந்தால், இந்தியனோடு இந்தியனாக வாழ கற்றுக் கொள்ளவேண்டும். நான் என் நாட்டில் அப்படி, இப்படி என்பதெல்லாம் நான் ஏற்றுக்கொள்வதில்லை.

ஏனென்றால் அது கிறிஸ்துவிலிருந்த தன்மைகள் அல்ல. பிலி. 2:6-8. இது எங்கள் உறவு முறிய ஒரு காரணம். ஒரு ஊழியக்காரன் ஏழை, எளிய விசுவாசிகளின் தசமபாகம், காணிக்கைகளில் ஆடம்பரமாக, சுகபோகமாக வாழ்வானானால் அவன் ஒரு ஏமாற்றுக்காரன் என்பதே என் கருத்து. முற்சபைக் காலத்தில் அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கையைக் கவனியுங்கள். வல்லமையான ஊழியம், எளிய வாழ்க்கை. ஆனால் இன்று பகட்டான ஊழியம், ஆடம்பரமான, சுகபோகமான வாழ்வு. இத்தன்மைகள் உள்ள ஊழியர்களை விட்டு விலகுங்கள்.

8. பாஸ்டர்.டேனியேல் தன் உழைப்பின் பலனால் படைக்கப்பட்ட அந்நிய அக்கினி ஸ்தம்பம் குறித்தும், தற்பொழுது தொடங்கியுள்ள புதிய தொழிலாகிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்தும் ஆவிக்குரிய விளக்கம் கேட்டு, இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து கொடுத்தால் அது அநேக ஆத்துமாக்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என சிலர் கூறினர். ஆதலால் **தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் அந்நிய அக்கினி ஸ்தம்பம்** என்ற தலைப்பில் தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து குறிப்புக்கள் எடுத்து, அவைகளைத் தொகுத்து வெளியிட்டேன். அதில் பத்திகள் 12 முதல் 54 வரை, அதாவது 43 பத்திகள் அந்நிய அக்கினி ஸ்தம்பம் குறித்து எழுதினேன். ஆனால் பாஸ்டர்.டேனியேல் தனது சுற்றறிக்கையில் 6வது பக்கம் கடைசி பத்தியில் ஆரம்பித்து 7வது பக்கம் 2வது பத்தியில், அதாவது 3 பத்திகளில் தன் விமர்சனத்தை முடித்துக்கொண்டார். நான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து எனது செய்தி தொகுப்புகளில் 2வது பத்தி முதல் 6வது பத்தி வரை, அதாவது 4 பத்திகள் எழுதியுள்ளேன். ஆனால் பாஸ்டர் டேனியேல் 40 பத்திகளுக்கு மேல் விமர்சனம் செய்துள்ளார்.

9. ஆதலால் இதுகுறித்து, பாஸ்டருடைய வலது கரம் சகோ.ஜாண் பாண்டியன், சகோ.தேவதாஸ் யிடம் கூறியது சரிதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். அதாவது சகோ.ஜாண் பாண்டியன், சகோ.தேவதாஸ்யிடம் நாங்கள் இப்பொழுது அக்கினி ஸ்தம்பத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்நாட்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்றார். இதை உறுதிப்படுத்தியே பாஸ்டர் அக்கினி ஸ்தம்பத்திற்கு விமர்சனம் அதிகமாய் கொடுக்காமல், தொலைக்காட்சிக்கு நீண்ட விமர்சனம் கொடுத்து அதை அங்கீகரிக்கிறார் எனப் புரிந்துக்கொண்டேன்.

10. அக்கினி ஸ்தம்பம் எனக் கூறிக்கூறி இன்னும் எத்தனை காலம்தான் இந்த மக்களை ஏமாற்ற முடியும்? ஆதலால் இப்பொழுது அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தற்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவிட்டார். இனி இதை வைத்துக்கொண்டு, மக்கள் மனதை மயக்கி, கொஞ்ச காலம் பணம் வசூல் நடக்கும். பின் இதை விட்டுவிட்டு அடுத்தத் தொழில் ஏதாவது ஆரம்பிப்பார். இவ்வாறாக இவரது தொழில் ஒன்று விட்டு ஒன்று மாறிக்கொண்டேயிருக்கும். ஏமாளிகள் இருக்கும்வரை ஏமாற்றுக்காரர்கள் இருந்து கொண்டேயிருப்பார்கள் அல்லவா?

11. இவரது **இடிமுழக்க எதிரொலி,** மலர் 2, இதழ் 11, ஏப்ரல் - செப்டம்பர் 1997 இதழைக் கவனித்தால், பக்கம் 12 முதல் 15 வரை அக்கினி ஸ்தம்பம் பல்வேறு கோணங்களில் தன்னை வெளிப்படுத்தியது எனக்கூறி அநேக புகைப்படங்களை பிரசுரித்து, பாஸ்டர் ஒருவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது அக்கினி ஸ்தம்பம் தோன்றியதாக உற்பத்திசெய்யப்பட்ட புகைப்படத்தை பத்திரிக்கையின் முன் அட்டைப்பகுதியில் வெளியிட்டு அதன் விளக்கத்தை 20வது பக்கத்தில் கொடுக்கிறார். அதாவது 8.6.1997ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கூடாரம், முலுண்ட், மும்பை சபையில் பாஸ்டர் சில சகோதர சகோதரிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அப்பொழுது மால்வானி ((மும்பை) சேர்ந்த சகோ.ஜாண் மூர்த்தி புகைப்படங்கள் எடுத்தார். பாஸ்டர் கழுத்தை சுற்றிலும் அக்கினி ஸ்தம்பம் மாலைபோல் தோன்றினதாக புகைப்படம் உற்பத்தி செய்து, அதைப் பத்திரிக்கையில் வெளியிட்டு, அதற்கு ஆதாரமாக ஏசாயா 60:1-3 வசனங்களையும், 4-5 வசனத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

12. இங்கு, இவர் தேவனுடைய வார்த்தையை தன் மனம்போன போக்கில் எடுத்து உபயோகப் படுத்தியுள்ளார் என எனது செய்தித் தொகுப்பில் பக்கம் 5, பத்தி 14(ஆ)ல் எழுதியிருந்தேன். இவர் வெளியிட்ட புகைப்படங்களுக்கும், அத்துடன் கொடுத்துள்ள வேத வசனங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பதுதான் எனது கேள்வி.

13. ஏசாயா 60:1-3 வசனங்கள் குறித்த விளக்கத்துக்கு **ஷாலோம்** என்ற தீர்க்கதரிசியின் செய்தியில் 29ம் பத்தியிலிருந்து நீங்கள் வாசிக்கலாம். எழும்பி பிரகாசி, உன் ஒளி வந்தது : வார்த்தை, ஒளி மறுபடியும் உறுதிப்படுத்தப்படுகிறது. தேவன் இந்நாளுக்கான ஒளியின் வாக்குத்தத்தத்தில் வெளிப்படுவதை நீங்கள் காணத்தக்கதாக, ஒளி - தேவனுடைய வார்த்தை - மறுபடியும் உறுதிப்படுத்தப்படுகிறது. காரிருள் ஜனங்களை மூடும் - இது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளுக்கான தீர்க்கதரிசனம். இந்த லவோதிக்கேயா சபையின் காலத்தில் அந்தகாரம், வார்த்தையாகிய இயேசு லவோதிக்கேயா சபையின் காலத்தில் சபைக்கு வெளியே நின்றுகொண்டு, கதவைத்தட்டி, உள்ளேவர முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இருள், காரிருள் ஜனங்களை மூடிக்கொண்டிருக்கிறது.

14. அடுத்து ஏசாயா 4:5. இது புதிய பூமியில் தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரும் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைக் குறிக்கிறது. இது குறித்து **பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்** என்ற செய்தியில் பக்கம் 79ஐ வாசிக்கலாம்.

15. இப்பொழுது பாஸ்டர் தனது சுற்றறிக்கையில் குறிப்பிடும் சகரி. 2:5ம் புதிய எருசலேமை சுற்றி தேவன் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாயிருப்பதைக் குறிக்கிறது.

16. பாஸ்டர் பிரசுரித்தப் புகைப்படங்களுக்கும், அதற்கென கொடுத்துள்ள வேத வசனங்களுக்கும் என்ன சம்பந்தம்? இதற்கு இவர் சரியான விளக்கம் தனது சுற்றறிக்கையில் கூட கொடுக்கவில்லை. ஏசாயா 60:1-3 வசனங்களைக் குறித்ததான தீர்க்கதரிசனம் இவரது ஊழியத்தில் நிறைவேறுகிறது என்கிறாரா? அப்படியானால் நிறைகுடம் தளும்பாது, குறைகுடம் கூத்தாடும் என்ற பழமொழிக்கேற்றவாறு இவர் கூத்தாடிக் கொண்டிருக்கிறார் என்றுதான் பொருள்.

17. அடுத்து, தீர்க்கதரிசி பிரன்ஹாம் கல்லறையில் எடுக்கப்பட்டப் புகைப்படத்தில் அவரது கல்லறையைச் சுற்றி அக்கினி சூழ்ந்திருந்தது என்கிறார். தீர்க்கதரிசி நித்திரை அடைந்தாலும் அவர் தேவனுடைய மனுஷன் என்பதை உறுதிப்படுத்த அங்கு அக்கினி ஸ்தம்பம், தேவனுடைய பிரசன்னம் காணப்பட்டது எனக் கூறலாம். ஆனால் இவரது சம்பவத்தில், மரித்தவன் பாஸ்டருடைய ஊழியத்தில் அதிகமாக பங்குகொள்கிறவன் - மனநிலை சரியில்லாதவன் - தற்கொலை செய்துகொண்டான். அவனுடைய சரீரம் அடக்கவேளையில் சவப்பெட்டி மீது அக்கினி ஸ்தம்பம், அதாவது தேவனுடைய பிரசன்னம் இறங்கியது எதற்காக? எதை உறுதிப்படுத்த? பாஸ்டர் சரியான விளக்கம் கொடுக்காமல் மழுப்புகிறார்.

18. பாஸ்டரே, நீங்கள் அக்கினி ஸ்தம்பம் மாயையில் புத்தியில்லாத கன்னிகைகளை, உறுதியில்லாத ஆத்துமாக்களை, விசுவாசத்தில் குறைவுள்ளவர்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தினீர்கள், அதுதான் உண்மை. அக்கினி ஸ்தம்பம் என்று வெளியிட்ட அனைத்துப் புகைப்படங்களிலும், அது உண்மையாகவே தேவனுடைய பிரசன்னம்தான் என்பதை நீங்கள் நிரூபித்தே ஆகவேண்டும்.

19. தீர்க்கதரிசி பிரன்ஹாமிற்கு பிறகு தங்களையும், தங்கள் ஊழியத்தையும் குறித்து மேன்மை பாராட்டி, அநேக மக்களை ஏமாற்றி, பிழைப்பு நடத்தியவர்கள் அனைவரும் விழுந்துபோய் விட்டார்கள். அவர்களை சார்ந்த யாவரும் சிதறடிக்கப்பட்டு, அவமாய்ப் போனார்கள். ஏனென்றால் தீர்க்கதரிசி மூலமாக தேவன் கொடுத்தச் செய்தியே லவோதிக்கேயா சபைக்கு கடைசிச் செய்தி. தீர்க்கதரிசிக்கு பிறகு ஒருவரும் கிடையாது. பாஸ்டர்.டேனியேல் தீர்க்கதரிசியின் செய்தியைக் கொண்டே, தனக்கு ஒரு ஊழியம் உண்டு எனக் கூறி மக்களை ஏமாற்றிவருகிறார். சகோ.ஜாண் பாண்டியன் எனக்கும் காதுகுத்த முயற்சித்தார்.

20. ஓ, என் அருமையான சஞ்சாரியே,.... ஒரு காலத்தில் உண்டாயிருந்த எழுப்புதல், இப்பொழுது அமைதியாகி விட்டது. இப்பொழுது அதிகம் காணப்படுவதில்லை என்பதை கவனித்தாயா? அது என்ன? புயல் வருவதற்கு முன்பு அமைதி. நியாயத்தீர்ப்பு விழ ஆயத்தமாயுள்ளது. இவைகளை நீ கவனித்துக்கொண்டு வருகிறாயா? நீ வேதவசனங்களை, வேதாகமத்தில் உள்ள வசனங்களை, அத்தாட்சிகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டு பார்த்தாயா? கடைசிக் காலத்தில் பிசாசு... என்னும் இயேசுவின் வார்த்தையை ஒப்பிட்டுப் பார்த்தாயா? அது உண்மையானதைப்போல் மிகவும் நெருங்கியிருந்து, கூடுமானால் அவர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தவிர, மற்றெல்லாரையும் வஞ்சிப்பான். அதைச் சற்று யோசித்துப்பார். வேதப்போதனை அவ்வளவு நெருக்கமாயிருக்கும். (ஒன்றாயிருத்தல். பக்கம் 71, பத்தி 224, நாள் 11.2.1962)

21. ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, இந்நாட்களில் வேதப்போதனை மிக்க நெருக்கமாயிருந்து தெரிந்துக் கொள்ளப்படாதவர்களை வஞ்சிக்கும். ஆதலால் இந்நாட்களில் நீங்கள் உங்களை தேவனுடைய வார்த்தையோடும், தீர்க்கதரிசியின் செய்தியோடும் மட்டுமே இணைத்துக்கொள்ளுங்கள். இதர உபதேசங்களுக்குச் செவிகொடாதீர்கள். அது உங்களை வஞ்சிக்கும். ஆதலால் உபதேசத்தில் உங்களை சரியாக வைத்துக் கொள்ளுங்கள்.

22. **இப்பொழுது, இங்கு நான் பகிரங்கமாக அறிவிப்பது என்னவென்றால், பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் தனது ஊழியத்தின் பாதையில் அக்கினி ஸ்தம்பம் தோன்றியது என பிரசுரித்த அனைத்து புகைப்படங்களின் நெகட்டிவ்களை ஆவிக்குரிய, விஞ்ஞான, இரசாயன ரீதியில் பரிசோதித்து, அது அனைத்தும் தேவனுடைய மகிமையின் பிரசன்னம் என கர்த்தருடைய வருகை கால தாமதமாகுமானால் மூன்று மாதத்திற்குள் நிரூபித்துவிட்டால், நான் தேவனுடைய மனுஷன்மேல் குற்றம் சுமத்தும் பொருட்டு அவர் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் என்றும், கள்ள கபடமுள்ள வேலையாள் என்றும் முத்திரையிடப்பட்டு என் ஊழியத்தை முற்றிலுமாக விட்டு விடுகிறேன். ஆனால் பாஸ்டர் நிரூபிக்கத் தவறிவிட்டால் அவரது ஊழியம் குறித்து நீங்களே முடிவு செய்யுங்கள். நான் பாஸ்டருக்கு இந்தச் சவாலை விட நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் ஊழியத்தில் மாய்மாலம், வஞ்சகம் எங்கே இருக்கிறது என்பதைச் சபை அறிய வேண்டிய காலக் கட்டத்துக்குள் இருக்கிறது.**

23. **தொலைக்காட்சி, தொழில்காட்சியாக உருவெடுத்து, தொல்லைக்காட்சியாக மாறிவிட்டது ஏனோ? உ**பதேசத்தில் மாறுபாட்டைக் கொண்டுவரும்போது நான் அதற்கு நிச்சயமாக பதில் கொடுப்பேன் என்று கூறி, தொலைக்காட்சியைப் பற்றிய காரியம் உபதேசமாகி விட்டதால், அதில் உள்ள மாறுபாடுகளை சரிசெய்கிறேன் என்று கொச்சிக்கிற பாஸ்டர்.டேனியேல் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் உள்ள மாறுபாடுகளை நாம் இங்கு பரிசுத்தஆவியின் ஒத்தாசையோடு தியானிப்போம்.

24. இவரது சுற்றறிக்கை பக்கம் 8, பத்தி 2ல் எனது **கிறிஸ்தவ விவாகம் மற்றும் விவாகரத்து** என்ற புத்தகத்தைப் படித்ததாகவும், அதில் அநேக காரியங்களைக் குறித்து நான் வேதத்திலும், தீர்க்கதரிசியின்

செய்திகளிலிருந்து எடுத்து தவறான வியாக்கியானம் கொடுத்துள்ளதாகவும் எழுதியுள்ளார். உபதேசத்தில் மாறுபாடுகள் காணும்போது பதில் கொடுக்கிறவர் சுமார் ஐந்தரை ஆண்டுகள் என்ன செய்துக்கொண்டிருந்தார்? இந்தப் புத்தகம் 1995, மார்ச் மாதம் வெளியிடப்பட்டதே. தன் கடமைகளை மறந்து பணம் சம்பாதிக்கும் வழிகளில் காலத்தை தன் சுயநலனுக்காக பிரயோஜனப்படுத்திக் கொண்டுவந்தாரோ? ஐந்தரை ஆண்டுகள் கிடைக்காத சமயம் இப்பொழுதுதான் கிடைத்ததா? ஐந்தரை ஆண்டுகள் இல்லாத அக்கரை இப்பொழுது என்ன திடீரென்று உதயமாகிவிட்டது? அக்கினி ஸ்தம்பம் தொழில் டல் அடித்து விட்டதினால் புதிய தொழிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடங்க, அதற்கு இவன் முட்டுக்கட்டையாகக் குறுக்கே வந்து நிற்கிறானே என்ற வயிற்றெறிச்சலா? எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. இவருடைய ஊழியத்திற்கு நான் தடையாக இருக்கமாட்டேன். மேலும் இவருடைய ஊழியத்தைத் தடை செய்ய நான் முயற்சிப்பதும் இல்லை. அது என் பணி அல்ல. ஆனால் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும் மக்களுக்கு, அவர்கள் செம்மையான வழியைவிட்டு விலகிவிடாதபடி அவர்களுக்குச் சரியான உபதேசங்களை எடுத்துக்கூறி, வழி இதுவே, இதிலே நடவுங்கள், வஞ்சிக்கப்படாதீர்கள், மோசம்போகாதீர்கள் என எச்சரிக்க வேண்டியது என் கடமையாயிருக்கிறது. அதைத்தான் அன்று முதல் இன்று வரை செய்து வருகிறேன். இதனால் அநேகருக்குச் சத்துருவாகியும் வருகிறேன்.

25. இமெநேயும், பிலேத்தும் சத்தியத்தை விட்டுவிலகி விசுவாசத்தை கவிழ்த்துப் போடுகிறார்கள், தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்துவிட்டான் என பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். அன்று இமெநேயும், பிலேத்தும் பவுலைக் குறித்து, இவன் எங்களைப்பற்றி தரக்குறைவாயும், பரிகாசம் பண்ணியும் எழுதியுள்ளான் என்றுதான் கூறியிருப்பார்கள். சத்தியத்தை எழுதும்போது சத்துருவாகத்தானே வேண்டியதுள்ளது. பவுல் தன்னுடைய பணியைச் செய்ததுபோல, நானும் என்னுடைய பணியைச் செய்கிறேன். பாஸ்டர்.டேனியேலும் அவருடைய பணியைச்செய்து கொண்டிருக்கிறார்.

26. தொலைக்காட்சியைக் குறித்ததான, இவரது விளக்கம் அவரது சுற்றறிக்கை பக்கம் 9ன் கடைசிப் பகுதியில் ஆரம்பமாகிறது. இவரது ஆரம்பம் : **எப்பொழுதுமே தீர்க்கதரிசியின் செய்தியோடு வேதத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது** என உள்ளது. எனக்கு பிரியமானவர்களே, **நாம் தீர்க்கதரிசியின் செய்தியோடு வேதத்தை ஒப்பிட்டு பார்க்கவேண்டாம். மாறாக தேவனுடைய வார்த்தையோடு தீர்க்கதரிசியின் செய்தியை ஒப்பிட்டுப் பார்ப்போம்.** ஆக இவரது தொடக்கமே முரண்பாடாகத்தான் இருக்கிறது. முரன்பாட்டை சரி செய்யப்போகிறேன் என்று கூறி முரன்பாட்டுக்கே காரணக்கர்த்தவாக அல்லவா இருக்கிறார். இவரது முதற்கோணல் முற்றிலும் கோணல்தான் என்பது எனது கணிப்பு.

27. **முதலாவதாக** : இவர், **பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும்** பக்கம் 35, பத்தி 87,88ஐ எடுத்துக்கொண்டார். நான் இந்த இரு பத்திகளின் சாராம்சத்தை 88வது பத்தியின் தொடக்கத்தில் கண்டு, அதை மட்டும் எடுத்து, குறிப்பிட்டுள்ளேன். கேள்விக்கேட்டவர், தொலைக்காட்சி உலகத்துக்கே ஒரு சாபம் என்கிறார். அதை தீர்க்கதரிசியும் ஆமோதித்து, உங்களுடன் நான் நிச்சயம் இணங்குகிறேன். அது மானிட வர்க்கத்துக்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது. அது மிகவும் பயங்கரமான ஒன்று என்று கூறுகிறார். மேலும் நான் தொகுத்தெழுதின குறிப்புகளை எங்கிருந்து எடுத்தேன் எனவும் குறிப்பிட்டுள்ளேன். எதற்கு? நீங்கள் அந்த பகுதியை செய்திகளில் கண்டு அதை தியானிக்கவேண்டும் என்பதற்காகவே. உங்களுக்கு எதையும் மறைத்து எழுதவேண்டும் என்று நான் நினைத்திருந்தால் நான் எழுதின குறிப்புகளை எங்கிருந்து எடுத்தேன் என எழுதியிருக்கமாட்டேன். ஆதலால் பாஸ்டர், நான் ஜனங்களின் கண்களிலே பொடியைத் தூவி இதரப்பகுதிகளை மறைத்துவிட்டேன் என பல இடங்களில் கூறி அங்கலாய்த்துக் கொள்வது அபத்தம், அக்கிரமம், அநியாயம். பிரியமானவர்களே, தீர்க்கதரிசி தொலைக்காட்சியை ஒரு சாபம் என்று கூறிய பிறகு, நீங்கள் சாபத்துக்குள்ளாகாதபடி அந்த அருவருப்பானதை உங்கள் வீட்டில் வைக்காதீர்கள். அதை சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவீர்கள். துன்மார்க்கருடைய வீட்டில் கர்த்தருடைய சாபம் இருக்கிறது.

28. தீர்க்கதரிசி **நீங்கள் அதை எவ்விதமாக செய்து வருகிறீர்கள் என்பதை அனுசரித்து அது உள்ளது, நீங்கள் அதில் காணும் நிகழ்ச்சி என்னவென்பதைப் பொறுத்தது** எனக்கூறும் ஆறுதலான வார்த்தைகளை பாஸ்டர் தனக்கு ஆதாயமாக, ஆதாரமாகக் கொண்டு, தொலைக்காட்சி வீட்டில் வைத்திருப்பது, பாஸ்டருடைய செய்திகளை அதில் பார்ப்பது, இன்னும் பல கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை அதில் காண்பது, இதில் தவறு ஒன்றும் இல்லை என்று தனது எண்ணத்தை பிரதிபலிக்கிறார். அதாவது சாபத்தில் ஆசீர்வாதத்தைக் காணமுடியும் என்கிறார். ஏன்? அக்கினி ஸ்தம்பம் வியாபாரம் நின்றுவிட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்ற போர்வையின் கீழ், புதிய தொழிலில் பணம் சம்பாதிக்க வேண்டாமா? பெரியபெரியத் திட்டங்கள் போட்டால்தானே பணம் சம்பாதிக்க முடியும்? இவரது சொந்தப்பணத்திலே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்தவேண்டியதுதானே? இதற்கென ஏன் நன்கொடை, காணிக்கை, தசமபாகம் விசுவாசிகளிடம் வசூல் செய்யவேண்டும்? தனது சுற்றறிக்கை 15வது பக்கத்தில் ஒரு லட்சம் கடன் பட்டுள்ளேன் என முதலைக்கண்ணீர் வடிக்கிறார். அப்படியானால் இதுவரை கொள்ளையடித்த பல லட்சங்களை எந்தக் கணக்கில் சேர்ப்பது? அது வரவுதானே. வந்த வரவில் இந்த ஒரு லட்சம் கடன் ஒன்றுமில்லையே. ஊழியத்தில் கடன் கடன் என்பது பணம் பறிக்கத்தானே. மக்கள் மனதில் அனுதாப அலைகளை உருவாக்கத்தானே? பாஸ்டர் தன் சுயவருமானத்தில் இத்தனை ஆடம்பரமாக வாழ முடியுமா? ஏழை, எளிய மக்களின் காணிக்கை தசமபாகத்தில் தானே இத்தனை சுகபோகம், ஆடம்பரம். சபை ஸ்தாபன ஊழியக்காரர்கள் இவரைவிட எவ்வளவோ பரவாயில்லை.

29. கர்த்தர், தீர்க்கதரிசியின் ஊழிய நாட்களில், அவருடைய செய்தியைத் தொலைக்காட்சிகளில்

அனுமதிக்கவே இல்லை. ஆனால் அவருடைய ஊழிய காலத்தில் அமெரிக்காவில் தொலைக்காட்சிகள் உண்டு. ஆனாலும் கர்த்தர் அதன் மூலமாக தம்முடையச் செய்தியை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவில்லை. தொலைக்காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை பார்க்கிற ஜனங்களுக்காக கர்த்தர் தம்முடையச் செய்தியைத் தொலைக்காட்சியில் அனுமதிக்கவில்லை. செய்தியை இதுவரை பெற்றுக்கொள்ளாத ஜனங்களுக்காகவும் கர்த்தர் அதை அனுமதிக்கவில்லை. மாறாக கர்த்தர் தமதுச் செய்தியை தம்முடைய பிள்ளைகளுக்கு எடுத்துச்செல்ல ஒலிநாடாக்களையும், புத்தகங்களையுமே உபயோகித்தார்.

30. நூதன பாஸ்டர்.டேனியேல், நாளை ஜனங்களைப் பார்த்து சிகரெட் புகைப்பது, வெற்றிலை பாக்கு போடுவது, புகையிலை போடுவது, சினிமா பார்ப்பது போன்றவைகளைப் பற்றி வேதத்தில் ஒன்றுமே கூறப்படவில்லை. மேலும் தொடாதே, ருசிபார்க்காதே, தீண்டாதே இவைகளெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே, இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையும், சரீரஒடுக்கத்தையும் பற்றிய ஞானமென்று பேர்கொண்டிருக்கிறதேயன்றி மற்றொன்றுக்கும் பிரயோஜனப்படாது எனக் கூறி மக்களை சாத்தானுக்கும், சாபத்துக்கும் அடிமையாக்கி விடுவாரோ என்று அஞ்சுகிறேன். ஏனென்றால் முதலாவது நாம் அறியவேண்டிய ஒரு காரியம் **T.V** யைப் பற்றி வேதத்தில் ஒன்றும் கூறப்படவில்லை என்கிறாரே!

31. இங்கு நான் என் ஊழியத்தின் பாதையில் கண்ட பல தொலைக்காட்சி சம்பவங்களில் இரு சம்பவங்களை, அது உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாயிருக்கும் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன்.

அ. ஒரு விசுவாசி வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி உண்டு. அந்த சகோதரன் பொதுவாக செய்திகள், **Discovery channel etc.**, போன்ற நிகழ்ச்சிகளை மட்டுமே பார்ப்பார். அது பொது அறிவுக்குத் தேவை என்பார். ஏனென்றால் அவர் படித்தவர், பட்டம் பல பெற்றவர். ஒரு நாள் அவர் இல்லாத நேரத்தில் நான் அவர் வீட்டிற்குப் போக நேர்ந்தது. அவரது சிறுபெண் சினிமா நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தாள். வீட்டில் சாபத்தை வைத்திருப்பதால் அது பெரியவர்களை பாதிக்காவிட்டாலும், நிச்சயமாக அது சிறுவர்களை பாதிக்கத்தான் செய்கிறது. தொலைக்காட்சிப் பெட்டியை வீடுகளில் வைத்திருப்பதும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு இடறலே, சாபமே.

ஆ. அடுத்து ஒரு ஊழிய வாஞ்சையுள்ள படித்த, பட்டம் பல பெற்றுள்ள மற்றொரு சகோதரரையும் அறிவேன். இவர் வீட்டிலும் தொலைக்காட்சிப் பெட்டி உண்டு. ஆனால் இவர் வீட்டில் இவர்கள் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்ப்பார்கள் என்பதை நான் அறியேன். பொதுவாக என்னுடைய ஊழியத்தின் பாதையில் நான் பார்த்த அளவில் படித்தவர்கள், பணவசதிகள் உள்ள ஊழியக்காரர்கள், விசுவாசிகள் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கத்தான் செய்கிறது. படிப்பும் பணவசதிகளும் அவர்கள் ஆத்துமாவை பாழாக்கிக் கொண்டிருக்கிறது. இதைக்குறித்துதான் வேதம் ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது எனக் கூறுகிறது. அதோடு மட்டுமல்ல தேவ இரகசியங்களை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தப்படுவதாக கூறுகிறது. இந்தச் சகோதரன் பொதுவாக ஞாயிறு மட்டும் ஊழியக்காரியங்களில் ஈடுபடுவார். இதர நாட்களில் தன் தொழிலில்தான் கண்ணும் கருத்துமாயிருப்பார். இந்நாட்களில் ஊழியம், ஆவிக்குரிய கூட்டம் இவைகளுக்கு அழைத்தால்கூட வரமாட்டார். ஏனென்றால் ஞாயிறு தவிர இதர நாட்களில் தன் தொழிலை விட்டுவிட்டு வந்தால், அது தன் தொழிலைப் பாதிக்கும், தனது வாடிக்கைக்காரர்கள் மற்றவர்களிடம் சென்று விடுவார்கள் என்பார். ஆக ஞாயிறு தவிர இதர நாட்களில் கர்த்தருடைய காரியத்தைவிட, தன் தொழிலுக்கே முக்கியத்துவம் கொடுப்பவரை தொலைக்காட்சி எப்படி ஆட்கொண்டது என்பதைப் பாருங்கள். ராஜீவ் காந்தி (நமது நாட்டு முன்னாள் பிரதமர்) கொலை செய்யப்பட்டு, அவரது உடல் அடக்க நாள் அன்று நமது சகோதரர் தன்தொழிலை மறந்து பல மணி நேரங்கள் அந்த தொலைக்காட்சி முன் அமர்ந்திருந்தார். பாருங்கள், தொழில் நாட்களில் கர்த்தருடைய காரியங்களுக்காக நேரம் ஒதுக்க முடியவில்லை, மனமில்லை. ஆனால் உலகப்பிரகாரமான காரியத்துக்காக பலமணி நேரங்கள் ஒதுக்கக் காரணமாக இருந்தது இந்த தொலைக்காட்சியே.

32. வேதத்தைப் படிப்பதைக் காட்டிலும், நீங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகம் விரும்புகிறீர்கள். தேவனுடைய வார்த்தையில் கூறப்படுபவர்களை நீங்கள் உதாரணமாக எடுத்துக் கொள்வதற்கு பதிலாக தொலைக்காட்சிகளில் வருபவர்களை நீங்கள் எடுத்துக் கொள்ளுகிறீர்கள். பாருங்கள், அப்படியானால் நியாயத்தீர்ப்பு வந்தே தீரவேண்டும். அது படிப்படியாக மோசமாகிக் கொண்டே போகின்றது. ( இக்காலத்தின் அடையாளம். பக்கம் 21, பத்தி 67. நாள் 13.11.1963 ) பாருங்கள் தொலைக்காட்சியைப் பார்த்துப் பார்த்து மக்கள் தொலைக்காட்சியில் தோன்றுபவர்களுக்கும், அவர்கள் கொடுக்கும் உபதேசங்களுக்குமே முக்கியத்துவம் கொடுத்து, வேதத்தை, தேவனுடைய வார்த்தையை மறந்து விடுகிறார்கள். இந்த அனுபவத்தை என்னுடைய ஊழியத்தின் பாதையில் நான் கண்டிருக்கிறேன். பாருங்கள் சகோதரரே, இன்னார் இப்படி இப்படி தொலைக்காட்சியில் பிரசங்கித்ததை நான் கேட்டிருக்கிறேன், அவரைவிட நீங்கள் ஒன்றும் பேரும் புகழும் பெற்றவரல்ல, அனுபவசாலியுமல்ல, அவரைவிட உங்கள் ஊழியம் ஒன்றும் அவ்வளவு ஜனங்கள் மத்தியில் பிரபலமாகவில்லை, இப்படியிருக்க அவர் உபதேசம் தவறு என்று நீங்கள் எவ்வாறு கூறலாம் என்கிறார்கள். அவர்கள், தொலைக்காட்சிகளில் தோன்றும் நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்கள் ஊழியம் தான் கர்த்தருடைய ஊழியம் என்ற தவறான சிந்தனைக்கு வந்துவிடுகிறார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தேவனுக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல்: ஊழியக்காரர்களுக்கும், அந்த ஊழியக்காரர்களுடைய உபதேசங்களுக்குமே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இப்பொழுது மக்கள் நம்பிக்கை கிறிஸ்து மீதில்லாமல் ஊழியக்காரர்கள் மீதும், அவர்களுடைய உபதேசங்கள் மீதும் இருக்கும்படியாக திசைத் திருப்பப்படுகிறார்கள். இதுதான் வஞ்சிப்பு.

33. அடுத்து வானொலி நிகழ்ச்சிகளோ, தரமுள்ள பத்திரிக்கைகளோ ஒருவனிடம் கண்களின், மாம்சத்தின் இச்சைகளை உருவாக்குவது இல்லை. ஆனால் தொலைக்காட்சிகளில் நாம் காட்சிகளைக் காண்கிறதினால் அவைகள் இச்சைகளைத் தூண்டுகிறதாகக் காணப்படுகிறது. நிச்சயமாக தொலைக்காட்சிக்கும் சினிமாவுக்கும் வித்தியாசமே இல்லை. தொலைக்காட்சி என்ன? அது ஒரு சின்ன சினிமாத்திரை தான்.

34. நாம் கண்களின் இச்சைகள் குறித்து 1யோ. 2:16, பிர. 2:10, ஆதி. 3:16 போன்ற வசனங்களில் காண்கிறோம். கண்களில் வெளிச்சம் உண்டு, இருளும் உண்டு . பரிசுத்தமும் உண்டு, அசுத்தமும் உண்டு : நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. தொலைக்காட்சிகளில் கண்களின் பார்வைக்கு ஆகாதவைகளையும் காண நேரிடும். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் மக்கள் மதிமயங்கி போவார்கள். கண்களின் இச்சைகளினால் மனம் மகிழ்ச்சியாகும். அது பார்வைக்கு இன்பமானதாயிருப்பதால், ஆசைகளும் அலைபாயும். உதாரணமாக ஏதேன் தோட்டத்தில் ஜீவ வழியையும், மரண வழியையும் கர்த்தர் வைத்தார். ஆனால் மனுஷன் மரண வழியையேத் தெரிந்துகொண்டான். ஏனென்றால் அதுவே அவனுடையப் பார்வைக்கு இன்பமாயிருந்தது. அவ்வாறாகவே நாமும் தொலைக்காட்சியினால் நிச்சயமாக பற்பல இச்சைகளுக்குட்படுத்தப்படுவோம்.

35. சபையே உனக்கு என்ன நேர்ந்தது? நீ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமாகக் கண்டு, உலகத்தின் காரியங்களை அதிகமாகக் கொண்டிருக்கிறாய். உன்னுடையப் பழைய ஆதாமின் சுபாவம் மிதந்து சென்று அதற்குள் நுழைந்து, மற்றவர்களைப் போல் நடந்து கொள்வதென்பது மிகவும் எளிது. ( வழி நடத்தும் தன்மை. பக்கம் 37, பத்தி 157, நாள் 7.12.1965 )

36. ஆவிக்குரிய நிகழ்ச்சிகள் என்ற போர்வையின் கீழ், நாம் தொலைக்காட்சிகளிலும் தேவையற்ற காட்சிகளையும் காண நேரிடும். மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் பொல்லானதே! ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, சாபத்தை வீட்டில் வைத்துக்கொண்டு சாபத்துக்குள்ளவர்களாகி விடாதீர்கள். ஒருவன் சாத்தான் குடியிருக்கும் இடத்தில் இருந்துகொண்டு, நான் நல்லவன், உத்தமன்,என்னை பாருங்கள், என் பிரசங்கத்தை கேளுங்கள் என்றால், அவன் இருக்கும் இடத்தை நோக்காதீர்கள், அங்கு கொடிய வஞ்சனை உண்டு.

37. **இரண்டாவதாக** : பாஸ்டர்.டேனியேல் எடுத்துக்கொண்டப் பகுதி **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்** பாகம் இரண்டு, பக்கம் 868, பத்தி 161. இவரது சுற்றறிக்கையில் பக்கம் 12. நான் இந்தப் பகுதியில் தீர்க்கதரிசி சொன்னதை எழுதாமல் ஒரு வார்த்தையை மறைத்தும், ஒரு எழுத்தை எடுத்து விட்டும், பத்தியின் முழுப் பொருளையே மாற்றிவிட்டேன் எனத் தீய சிந்தையுடன் என் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

38. இந்தப்பத்தியின் தொடக்கம் **ஆனால்** என்ற வார்த்தையுடன் ஆரம்பமாகிறது. **ஆனால்** என்ற வார்த்தையை நான் அறிந்தே விட்டுவிட்டேன். **ஆனால்** என்ற வார்த்தையை நான் எடுத்து விட்டதினால் அந்த பத்தியின் பொருள் மாறவில்லை என்பது என் கருத்து. பாஸ்டர் டேனியேல் செய்திக்கும், வாக்குமூலத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் குழப்ப நிலையில் இருக்கிறார். **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்** என்பது தீர்க்கதரிசியின் செய்தியாகும். அது அவரது வாக்குமூலம் அல்ல. தீர்க்கதரிசியின் வாக்குமூலத்திலிருந்து நான் **ஆனால்** என்ற வார்த்தையை எப்படி எடுக்கலாம் என பிதற்றுகிறார். **ஆனால்** என்ற வார்த்தையை நான் விட்டு விட்டதினால் அந்த பத்தியின் பொருள் மாறிவிட்டதா என்பதை பிரியமானவர்களே நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள். இதை உங்களுடையத் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன். **ஆனால்** என்ற வார்த்தையை நான் விட்டுவிட்டதினால் முழுப்பொருளே மாறிவிட்டதென என மீது இவர் சாடுவதிலிருந்து யாருடைய கள்ள மனம் துள்ளிப் பாய்கிறது என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

39. அடுத்து நான் **மக்களோ** ( People ) என்ற வார்த்தைக்குப் பதிலாக **மக்களே** என்று எழுதி, அந்தப் பத்தியின் முழுப்பொருளையும் மீண்டும் மாற்றிவிட்டேன் என வீண்பழியை என் மீது சுமத்துகிறார். நீங்கள் என்னுடைய கம்ப்யூட்டர் பிரிண்டை பார்த்தால் **மக்களே , 'ா'** துணை எழுத்து இடத்தைவிட்டு சற்றுத் தள்ளி **கமா ( , )** கிடப்பதைக் காணலாம். அதாவது **மக்களோ** என்று கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்டது, ஏதோ ஒரு தவறினால் அந்த துணை எழுத்து ( ா ) விடுபட்டுள்ளது. ஆதலால் வஞ்சனை என்பது என் உள்ளத்தில் இல்லை. மாறாக அது பாஸ்டர் உள்ளத்தில்தான் ஊற்றெடுத்து நதியாய் பாய்ந்து செல்கிறது என்பதை அவருடைய குற்றச்சாட்டுக்களை நிருபிக்கிறது.

40. மேலும் **மக்களே** (ஆங்கிலத்தில் people என்றேயுள்ளது) என்பது ஒரு பொது வார்த்தை. இது விசுவாசிகள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் குறிக்கும் வார்த்தையாகுமேயன்றி ஒரு சாராரை மட்டும் குறிக்கும் சொல் அல்ல என்பது என் கருத்து. **மக்களே, மக்களோ** இந்த இரு வார்த்தைகளுக்குமிடையே பொருள் வித்தியாசம் கிடையாது என்பது என் அறிவு. ஆகாத மனைவி கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம் என்ற பழமொழிக்கு ஏற்ற மனப்பான்மை தான் பாஸ்டரது குற்றச்சாட்டுக்களில் காணப்படுகிறது.

41. **மூன்றாவதாக** : பாஸ்டர் **அருப்பின் நேரம்** பக்கம் 6, பத்தி 17-19 வரை எடுத்துக்கொண்டார். இதில் என்னைப் பொறுத்த அளவில் முதல் இரண்டு வரிகளே போதுமானது. இங்கு தீர்க்கதரிசி **நான் தொலைக்காட்சியை விரும்புவது இல்லை. உங்களுக்குத் தெரிந்துள்ளபடி, அதற்கு நான் விரோதம்** என்று கூறிவிட்டார்.

42. பிரியமானவர்களே, நான் உங்களுக்குத் தீர்க்கதரிசியின் உபதேசங்களைக் கூறி, அதன்படி உங்களை வழிநடத்த விரும்புகிறேன். **நான் உங்களை ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய் பிரவேசிக்க வழி காட்டுகிறேன். ஆனால் பாஸ்டர் உங்களை வேறு வழியாய் பிரவேசிக்க வழி காட்டுகிறார். நான் உங்களைக் கலியாணச் சாலையில் கலியாண வஸ்திரம் தரித்த விருந்தாளியாகக் காண விரும்புகிறேன். ஆனால் பாஸ்டர் உங்களைக் கலியாண வஸ்திரம் தரித்திராத மனுஷனாக உங்களைக் காணவிரும்புகிறார்.** தன்னுடைய செல்வாக்குக்கும், பேர் பிரஸ்தாபத்துக்காகவும், பண சம்பாத்தியத்துக்காகவும் உங்களைப் பலி கடாவாக்க விரும்புகிறார். இந்நிலையில் எங்கள் இருவர்களுடைய ஆலோசனைகளில் யாருடைய ஆலோசனைகள் உங்களுக்கு நலமாகத் தோன்றுகிறதோ அவைகளைப் பற்றிக்கொள்ளுங்கள். ஆனால் எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதப் படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

43. ஒரு சில நன்மைகள் இருக்கிறது என்பதற்காக நாம் தொலைக்காட்சிப் பெட்டியை வீட்டில் வைக்கலாமா? கூடாதே! ஒரு சதவீதம் நன்மை இருக்கிறதென்பதற்காக மீதமுள்ள 99 சதவீதம் தீமைகளை வீட்டில் அனுமதிக்கலாமா? நாம் நூறு சதவீதம் பூரணராக கடந்து செல்லவேண்டியவர்களாய் இருக்கிறோமே!

**44. The television has come into the home and holds people away from the prayer meetings. It's got an attraction to it that's attractive and beautiful. And I don't say that some of the programmes isn't all right. There's a lot of it that isn't. We know that. But I don't ... yes, ninety nine percent of it, isn't all right. But say, there'd be one percent of it, well, what you get in that one percent, would you mean to give up that one percent for the church of the living God, where it's a hundred percent right. (Un certain sound Dt. 15.3.1961)**

45. **நான்காவதாக** : பாஸ்டர்.டேனியேல், **மறுருபப்படுத்தும் வல்லமை** செய்தியில் 242 வது பத்தியைக் குறிப்பிடுகிறார். இங்கும் தீர்க்கதரிசி **எங்களிடத்தில் தொலைக்காட்சிப் பெட்டி கிடையாது. என் வீட்டில் என்றைக்குமே ஒன்று இராது. நீங்கள் ஒன்றை வைத்துக்கொள்ள விரும்பினால் அது உங்களைப் பொறுத்தது. அதை வைக்க வேண்டாமென்று தேவன் என்னிடம் கூறினார்.** இது போதுமான உபதேசம். இதுதான் வழி. வழி தவறி நீங்கள் வேறு வழியில் செல்ல விரும்பினால் பாஸ்டரின் வழி செல்லுங்கள். நல்வழியில் நடக்க விரும்பினால் தீர்க்கதரிசியின் மூல உபதேசத்தைக் கடைப்பிடியுங்கள். நான் உங்களை வஞ்சிக்கிறேனா அல்லது பாஸ்டர் தன் சுயநலத்துக்காக உங்களை வஞ்சிக்கிறாரா என்பதை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

46. **ஐந்தாவதாக** : பாஸ்டர்.டேனியேல், **COD, Q & A 171, Page 724, Para 179** ஐ எடுத்து வியாக்கியானம் பண்ணுகிறார். இந்த கேள்வி பதிலில் தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? **The seeds will go in news papers, reading materials until every predestinated seed of God has heard it.** அதாவது இக்காலத்துக்குரியச் செய்தியை தேவனால் முன்குறிக்கப்பட்ட ஒவ்வொரு வித்துக்களும் கேட்கும்வரை அது செய்தித்தாள்களிலும், வாசிக்கும் செய்பொருட்கள் வழியாகவும் செல்லும் எனக் கூறுகிறார். தேவன் இக்காலத்துக்குரியச் செய்தியை சொல்லுவதற்காகக் காட்டிய வழி இதுதான். இதைத் தீர்க்கதரிசி காத்துக்கொண்டார். அவரைப் பின்பற்றுகிற நாமும் அதையே காத்துக்கொள்ளவேண்டும். வேறு வழிகள் எதையும் கர்த்தர் தீர்க்கதரிசிக்குக் காட்டவில்லை. அப்படியானால் நாம் வேறு வழியைத் தேடக்கூடாது. கர்த்தர் மோசேயிடம் உன் பாதரட்சையைக் கழற்று என்றார். அவன் அதற்குக் கீழ்ப்படிந்தான். அவன் அதை கழற்றினால் என் கால்கள் சுடும், ஆதலால் என் அங்கியைக் கழற்றுகிறேன் எனக் கூறவில்லை. பாஸ்டர் மனம் ஏன் குறுக்கு வழிகளை நாடுகிறது? குறுக்கு வழியில் தானே பணம் சம்பாதிக்க முடியும்! நேர் வழியில் என்றுமே பணம் சம்பாதிக்க முடியாதே! ஆடம்பரமாக வாழ முடியாதே!

47. தீர்க்கதரிசிக்கு கர்த்தர் காட்டிய வழிகளை விட்டுவிட்டு, வேறு வழிகளை நாடுவது ஒரு உண்மையும், உத்தமுமான ஊழியக்காரன் செயல் அல்ல. தீர்க்கதரிசியின் செய்தியை இன்டெர்நெட் மற்றும் தொலைக்காட்சிகளில் எடுத்து செல்வது அதிகப் பிரசங்கிகளின் வேலை. அவர்கள் கர்த்தருக்கென்று ஊழியம் செய்யாமல், தேவச்சித்தத்துக்கு புறம்பாக, தங்களுடைய பெயருக்காகவும், புகழுக்காகவும், பணம் சம்பாத்தியத்துக்காகவும், தங்களுக்கென்றே ஊழியம் செய்கிறார்கள். இது தேவச்சித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு சேவைச் செய்தலாகும்.

48. கர்த்தர், தம்முடையச் செய்தி மக்கள் மத்தியில் செல்ல, தீர்க்கதரிசிக்கு கொடுத்த வழி முறைகளுக்கும் : கர்த்தர் சிம்சோனுக்கும், எசேக்கியேலுக்கும், செபியாவுக்கும், ஓசியாவுக்கும் கொடுத்த கட்டளைகளுக்கும் என்ன சம்பந்தம்? உவமைகளுக்கும் பொருத்தம் வேண்டாமா? ஆவிக்குரியவர்களாகிய நீங்களே இதற்கும், அதற்கும் சம்பந்தமுண்டா என்பதை ஆவிக்கேற்றப் பிரகாரமாய் ஆராய்ந்து நிதானியுங்கள்.

49. Warning us, the time is at hand! Believers should be separating themselves from the things of the world, the cares of the world. That's the reason I hammer at women, and soforth, the way I have. **And, then separate yourself from these T.V programmes ! Separate yourself from these Hollywood Evangellasm, come back to the deepness and sincerity!** ( The Token. Page 14, Para 106, Dt. 28.11.1963)

50. நீங்கள் செய்யவேண்டியது என்ன? வீட்டில் காணப்படும் குப்பை (**Trash**) அனைத்தையும் அகற்றுங்கள். குட்டை பாவாடையையும், அரைக்கால் சட்டையையும், சீட்டாட்டத்தையும், சிகரெட்டையும், **டெலிவிஷனையும்** இதுபோன்ற எல்லாவற்றையும் தூர எறியுங்கள். ஏனெனில் நீங்கள் அடையாளத்தைப் போடப் போகிறீர்கள். ஆம், ஐயா, அனைத்தையும் அகற்றுங்கள். (அடையாளம். பக்கம் 75, பத்தி 5, செப்டம்பர் 1, 1963)

51. பாருங்கள், தீர்க்கதரிசி உங்கள் வீட்டிலிருக்கும் டெலிவிஷனை ஒரு உதவாப் பொருளுக்கு ஒப்பிட்டு, அதைத் தூக்கி வெளியே எறியுங்கள் என்கிறார். ஆனால் பாஸ்டர் என் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காணத் தொலைக்காட்சிப் பெட்டியை உங்கள் வீடுகளில் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள், எறிந்துவிடாதீர்கள் என ஆலோசனைக் கூறுகிறார். நீங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு, தீர்க்கதரிசிக்கு செவிகொடுக்க விரும்புகிறீர்களா அல்லது பாஸ்டர்.டேனியேலுக்கு செவிகொடுக்க விரும்புகிறீர்களா? கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளைத் தேடும் ஊழியங்களை, வஞ்சகத்தினாலும், துர்ராசையினாலும் உண்டாகும் கபடமுள்ள போதனைகளை விட்டுவிலகுங்கள்.

52. கடந்த மாதம், விசுவாசியாகிய ஒரு சகோதரனைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர் என்னிடம், முன்பு அவருடைய பாஸ்டர் வீட்டில் தொலைக்காட்சிப்பெட்டி கிடையாது எனவும், ஆனால் தற்சமயம் சபைமக்களுக்குத் தெரியாது, ஒன்றைவாங்கி தன்வீட்டில் ஒரு மூலையில் வைத்திருந்ததாகக் கூறினார். இதுகுறித்து, அந்தச் சகோதரர், தன்னுடைய பாஸ்டரிடம் கேட்டதற்கு, தன் மகளுக்கு தொலைக்காட்சி மீது மிக்க ஆசை எனவும், ஆதலால் சம்பாதிக்கும் அவளுடைய சகோதரன் அதை அவளுக்கு வாங்கிக் கொடுத்ததாகவும் கூறினாராம். பாருங்கள், இப்படிப்பட்ட ஊழியர்களைக் கொண்ட சபை உருப்படுமா? இவரால் தேவனுடையச் சபையை சத்தியத்துக்குள், இக்காலச் செய்தியினுள் வழிநடத்த முடியுமா? ஒருக்காலும் முடியவே முடியாது!

53. ஓ, இயேசுவின் நாமம் சபையே! அது எவ்வளவு மகிமையுள்ள சபை, இயேசுவின் நாமம் என்பது எவ்வளவு மகிமையுள்ள நாமம்! நீங்கள் மரிக்க ஆயத்தமா? …… தியாகம் என்னும் கிரயத்தை உண்மையாக, உத்தமமாகச் செலுத்த உங்களுக்கு விருப்பமா? **நான் முயன்றுப் பார்க்கிறேன்** என்று கூறுவதல்ல. அப்படியானால் நீங்கள் இன்னும் ஆயத்தமாகவில்லை, நீங்கள் கிரயத்தை செலுத்தி ஆயத்தமாகி, மரிக்கவேண்டும். **ஓ! தந்தைமார்களே, தாய்மார்களே, உங்கள் வீட்டில் ஒரு பலிபீடத்தை உருவாக்கவும், அந்த டெலிவிஷனை வெளியே அகற்றவும் நீங்கள் ஆயத்தமா? அல்லது இப்பொழுதுள்ள உங்கள் வழியில் நீங்கள் தொடர்ந்து செல்ல விரும்புகிறீர்களா?** (இன்னும் ஒரு விசை கர்த்தாவே. பக்கம் 44, பத்தி 132,133, நாள் 20.1.1963) **பிரியமானவர்களே இந்த செய்தியை தியானித்த பிறகும் நீங்கள் உங்கள் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டியை வைத்திருப்பீர்களானால் உங்களுக்கு ஐயோ! நீங்கள் இக்காலத்துக்குரியச் செய்திகளில் உள்ளவர்கள் அல்லவே அல்ல. முதலில் நீங்கள் ஒரு விசுவாசியல்ல. நீங்கள் ஒரு அவிசுவாசியே. எனக்குப் பிரியமான தந்தைமார்களே, தாய்மார்களே! பாஸ்டர்.டேனியேல் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்துப் போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்.**

54. பிரியமானவர்களே, நீங்கள் தொலைக்காட்சிக்கு மரிக்க ஆயத்தமா? அதுதான் இன்றுள்ள தொல்லை. நீங்கள் உலகத்துக்கும், அதே நேரத்தில் தேவனுக்கும் உரியவர்களாயிருக்க விரும்புகிறீர்கள். இவ்விரண்டும் கலவாது. அப்படியானால் நீங்கள் ஒரு பலனையும் கொடுக்க முடியாது. நீங்கள் பாஸ்டர். டேனியேலுக்கு செவிக்கொடுத்தால் இவ்வுலகத்துக்கு மரித்து பலன் கொடுக்க முடியாது. ஆதலால் தவறான வியாக்கியானத்தினால் உங்களைக் கறைப்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்கள் கன்னித்தன்மையை இழந்து விடாதீர்கள். ஆதலால் சத்தியத்திற்குக் கீழ்படியாமற்போக உங்களைத் தடை செய்பவனை எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் ஓடிப்போவான்.

55. **முடிவாக எனது முந்தின செய்திதொகுப்பில் 3வது பத்தி ஆங்கிலத்தில் உள்ளது. அதை வாசியுங்கள். தொலைக்காட்சியினால் உலகத்தார் ஒரு பெரிய வெற்றியை தங்கள் தொழிலில் கொண்டு வருவது : சபையானது தொலைக்காட்சியினால் ஒரு பெரிய வெற்றியைக் கொண்டுவரும் என்பதற்கு அது அடையாளம் கிடையாது. பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருக்குமானால், அது உங்களை தேவனுடைய வார்த்தையினால் போஷிக்கும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினால் அல்ல எனத் தீர்க்கதரிசிக் கூறுகிறார்.**

56. பாஸ்டர்.டேனியேல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து கொடுத்த விமர்சனத்தோடு நான் இங்கு கொடுத்துள்ள உதாரணங்களையும் ஒப்பிட்டுபாருங்கள்.

அ. ஞானஸ்நானம் குறித்து உபதேசம் என்ன? இது குறித்து **கேள்விகளும் பதில்களும்**, புத்தகம் 2:14ல் கேள்வி 151, இதன் பதிலில் 58வது பத்தியை வாசியுங்கள்.

இப்பொழுது, இந்தக் கேள்விக்கு சரியான விடை, சரியான ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானமே. அதற்கு மாறாக **வேறு வழியில் ஞானஸ்நானம் பெற்றவர்கள், தங்கள் இருதயத்தில் சுயநலமில்லாமல் நல்லது. அதனுடன் நான் விளையாடிக் கொண்டிருக்கவில்லை என்று கூறுங்கள். அது அந்த நபருக்கும் தேவனுக்கும் இடையே உள்ள ஒன்று.** ஆனால் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாமலிருந்தால் அவர்கள் இரட்சிக்கப் படுவார்கள் என்பது என் கருத்து. இதை என முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன். ஏனென்றால் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது என்கிறார்.

அப்படியானால் பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற கிறுத்துவக்காரர்களுக்கு பாஸ்டர்.டேனியேல் அவர்கள் கண்களில் பொடியைத் தூவித்தானா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறார்? தன் முழு இருதயத்தோடும் விசுவாசித்து பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவனுக்கு, அது தவறு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடு எனக் கூறலாமா? **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என்பது மூலஉபதேசம். பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் என்பது வேறு வழி**. அந்த வேறு வழி என்பது, தேவனுக்கும் அந்த நபருக்கும் இடையே உள்ள காரியம். பாஸ்டர்.டேனியேல் இந்த வேறு வழியைத்தான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மக்கள் பின்பற்றப் போதிக்கிறார். நீங்கள் மூலஉபதேசத்துக்கும், வேறு வழிக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து நலமானதைப் பற்றிக்கொள்ளுங்கள்

ஆ. தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கும் பரிசுத்த ஸ்திரிகளின் அலங்காரம் எது?. இது குறித்து **கேள்விகளும் பதில்களும்** புத்தகம் 2:20 ல் கேள்வி 283ஐ தியானியுங்கள்.

மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்து இருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாக இருக்ககடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. 1பேது. 3:3-4. இது மூலஉபதேசம்.

ஆனாலும், உன் கணவன் உனக்கு வாங்கித்தந்த ஒரு கழுத்து மாலையை நீ அணிந்து கொள்ள விரும்பினால் அல்லது அதைப் போன்ற ஒன்றை நீ ஏற்கனவே அணிந்திருந்தால், என்னைப் பொருத்த வகையில், அது தவறல்ல.. இது என் கருத்து. அது நீ அணுகும் முறையைப் பொருத்தது என நினைக்கிறேன்.. அதை செய்வதற்கான நோக்கம் என்ன என்பதைப் பொருத்தது, என தீர்க்கதரிசி கூறுகிறார். இதைக் கொண்டு நீங்கள் தவறு இல்லை என்று எண்ணினால், ஆபரணங்கள் அணிந்து கொள்ளலாம், என உபதேசிக்கலாமா? புறம்பான அலங்கரிப்பு ஒரு ஸ்திரிக்கு அலங்கரிப்பு இல்லை என்பது மூலஉபதேசம். ஓ! தீர்க்கதரிசி இப்படியும் சொல்லிருக்கிறார் என்று உன் ஆசையை நிறைவேற்ற ஒரு ஸ்திரி குறுக்கு வழியை, வேறு வழியை தேடுவாளானால் அவள் கிறிஸ்துவுக்குள் இல்லை.

பிரியமானவர்களே நாம் மூலஉபதேசங்களை நாடுவோம். பாஸ்டர் டேனியேல் ஆலோசனைகளின் படி குறுக்கு வழிகளை, வேறு வழிகளை நாட வேண்டாம்.

57. என்னுடைய எல்லா செய்தித் தொகுப்புக்களிலும் ஓரிரு வரிகளை மட்டும் எடுத்துக்கொண்டு, இதரப் பகுதிகளை மறைத்து விடுகிறேன் என குற்றம் சாட்டுகிறார். அப்படியானால் மேலே நான் கூறிய இரு உதாரணங்களிலும் அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம், மற்றும் பெண்கள் ஆபரணங்களினால் தங்களை அலங்கரிக்கக்கூடாது என்ற உபதேசங்களில் பாஸ்டரும் முன்பகுதிகளை தன் உபதேமாக்கிக்கொண்டு, பிந்தின பகுதிகளை ஏன் விட்டு விடுகிறார்? இவரும் மாய்மாலம் தான் பண்ணுகிறாரா?

58. பெண்கள் ஆபரணங்கள் அணிவதுக் குறித்து எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. கடந்த மாதம் ஒரு ஆவிக்குரியச் சகோதரனை சந்தித்த வேளையில், அவர் தன் சபையில் ஒரு ஞாயிறு ஆராதனையில் **எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே** என்றப் பாடலை சபையார் பாடியதாகவும், அந்தப் பாட்டின் கடைசிக் கவி **பொன் வெள்ளியுமோ, பெரும் பேர் புகழோ, பண ஆஸ்தியும் வீண் அல்லவோ** என்று இருந்ததால், அந்தப் பாடலை இனி சபையில் பாடவேண்டாம் என்று பாஸ்டர் கேட்டுக்கொண்டதாகக் கூறினார். விளக்கம் கேட்க, அதற்கு இந்த ஆசையில்லாமல் சபையில் யார் இருக்கிறார்கள்? இந்த ஆசை அனைவரிடமும் இருக்கிறது. ஆதலால் இப்படிப்பட்ட பாடல்களை சபையில் பாடத் தேவையில்லை என்றாராம். காரணம் என்னவென்றால், இவருடைய வீட்டில் பெண்பிள்ளைகள் பொன் ஆபரணங்களை அணிவது ஊஉண்டாம், மேலும் அவருக்கு சொத்து, ஆஸ்திகளும் உண்டாம். இவ்வாறாகத் தன் குடும்பத்தின் சூழ்நிலைகளுக் கேற்றவாறு சபை நடத்தும் ஊழியர்களைக் குறித்து என்னச சொல்வது? இங்கு ஆவிக்குரிய ஆகாரங்கள் கிடைக்குமா? சபையானது சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாக இருக்குமா? ஒருக்காலும் இருக்காது.

59. **It's too bad that the things of the world has so captured the church in these days. And satan had a rude way of doing it, to bring in the televisions right into the houses , and things , and corrupting the minds of the people. ( We would see Jesus. Dt. 27.7.1962)** இந்நாட்களில் சபை உலகத்துக்கடுத்தக் காரியங்களைப் பற்றிக்கொண்டது. இது மிக மோசம். தொலைக்காட்சியை வீட்டுக்குள் கொண்டு வருவதிலும், மக்கள் மனதைக் கெடுப்பதிலும் சாத்தான் கொடூரமான வழியைக் கொண்டுள்ளான். ஆம், பிரியமானவர்களே நாம் சாத்தானுக்கு நம் வீட்டில் இடம் கொடுக்க வேண்டாம். இருக்க இடம் கேட்டு, பின்பு படுக்கப் பாய் கேட்ட நிலையாகிவிடும்.

60. நீங்கள் எண்.22 வது அதிகாரத்துக்கு வாருங்கள். தேவன் பிலேயாமை நோக்கி: நீ அவர்களுடனே போகவேண்டாம். அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார். இதுதான் தேவசித்தம், கட்டளை. அவ்வாறாகவே தீர்க்கதிரிசியும் தேவனுடையச் சத்தத்துக்கு செவிக் கொடுக்கும் ஜனங்களை நோக்கி:

அ. **தொலைக்காட்சி உலகத்துக்கே ஒரு சாபம்.**

ஆ. அது மானிடவர்க்கத்துக்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது.

இ. அது மிகவும் பயங்கரமான ஒன்று.

ஈ. நான் தொலைக்காட்சியை விரும்புவது இல்லை.

உ. உங்களுக்கு தெரிந்துள்ளபடி நான் அதற்கு விரோதம்.

ஊ. எங்களிடத்தில் தொலைக்காட்சிப் பெட்டி கிடையாது.

எ. **என் வீட்டில் என்றைக்குமே ஒன்று இராது.**

ஏ. **தொலைக்காட்சிப் பெட்டியை என் வீட்டில் வைக்க வேண்டாம் என்று தேவன் என்னிடம் கூறினார்** என்றும், இன்னும் அநேக வார்த்தைகளினால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்டனம் பண்ணி, நாம் அதை விட்டு விலக வேண்டும் என்று புத்திமதி கூறுகிறார். இதுதான் தேவ சித்தம், மூல உபதேசம்.

61. இப்பொழுது பீலேயாமைப் பாருங்கள். அவன் தேவசித்தத்தை அறிந்தும், அது சிறிய காரியம் ஆனாலும் பெரிய காரியமானாலும் செய்யும்பொருட்டுத் தேவனாகிய கர்த்தர் கட்டளையை மீறக்கூடாது, ஆகிலும் கர்த்தர் இனிமேல் எனக்கு என்ன சொல்லுவார் என்பதை நான் அறியும்படிக்கு இரவு இவ்விடத்தில் இங்கேத் தங்குங்கள் என பாலாக்கின் ஊழியக்காரர்களை வேண்டிக்கொண்டான். **கர்த்தர் அவனை போகவிட்டார். ஆனாலும் அவன் போகிறதினாலே தேவனுக்கு கோபம் மூண்டது.**

62. பீலேயாம் ஆலோசனைகளினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தார்கள். அவ்வாறாகவே பாஸ்டர்.டேனியேல் ஆலோசனைகளின்படி சிலர் உங்களிடத்தில் வந்து,

அ. தொலைக்காட்சியைக் குறித்து வேதத்தில் ஒன்றும் கூறப்படவில்லை.

ஆ. அது நீங்கள் தொலைக்காட்சியில் காணும் நிகழ்ச்சி என்னவென்பதைப் பொருத்தது.

இ. நாம் சாபமாகிய தொலைக்காட்சியை ஆசீர்வாதமாக மாற்றலாம்.

ஈ. அது நீங்கள் தொலைக்காட்சியை எந்த வகையில் நோக்குகிறீர்கள் என்பதைப் பொருத்தது.

உ. தீர்க்கதரிசி தன் வாலிப பிள்ளைகளோடு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தார்.

ஊ. தீர்க்கத்தரிசி மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகளை காண தம்முடைய பிள்ளைகளுக்கு அனுமதி கொடுத்தார்.

எ. தொலைக்காட்சியைக் குறித்து தேவன் தீர்க்கதரிசிக்கு கொடுத்த கட்டளைகள் நமக்கு பொருந்தாது. அது தீர்க்கதரிசிக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளையாகும்.

ஏ. நீங்கள் தொலைக்காட்சிப்பெட்டியை உங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள விரும்பினால் அது உங்களைப் பொருத்தது எனக் கூறுவார்கள்.

63. இங்கு பீலேயாமைக் குறித்து தேவனுடைய மூலசித்தம் என்ன? நீ அவர்களுடனேப் போகவேண்டாம். ஆனாலும் அவனுடைய கள்ள மனதை அறிந்த தேவன், அவனை தன் அனுமதிக்கும் சித்தத்தின்கீழ் போகவிட்டார். ஆனாலும் அவன் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூண்டது. பிரியமானவர்களே நாம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து தேவனுடைய மூலசித்தத்துக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம். அவருடைய அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் நாம் செயல்படவேண்டாம். அதினாலே தேவனுடைய கோபம் மூளும்.

64. ஆதியில் தேவன் ஆதாமுக்கு தம்முடைய கட்டளையைக் கொடுத்து அவனை அவன் சுய விருப்பத்திற்கு விட்டுக் கொடுத்தார். அவ்வாறாகவே இக்காலத்திலும் தேவன் தீர்க்கதரிசி மூலமாக நமக்கு தொலைக்காட்சிக் குறித்ததான தேவசித்தத்தை, உபதேசங்களைக் கொடுத்து, பின் நம்மை நம் சுய விருப்பத்திற்கு விட்டுவிட்டார். தேவனுடைய மூலசித்தத்துக்கு உங்களைப் புறம்பாக்கி, தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்திற்கு உங்களை வழிநடத்தி தன்னுடைய பெயருக்கும், புகழுக்கும், உல்லாசமான வாழ்க்கைக்கும், பண சம்பாத்தியத்திற்கும் துடித்துக்கொண்டிருக்கும் பாஸ்டர் டேனியேலுக்கு நீங்கள் துணைபோகாதீர்கள். செம்மையான வழியைவிட்டு விலகாதீர்கள். இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும் படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக தேவன் கொடிய வஞ்சகத்தை அனுப்பும் காலம்.

65. பிரியமானவர்களே, நீங்கள் தொலைக்காட்சி உபதேசத்தில் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று நீங்கள் தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து கேட்டு ஏற்றுக்கொண்ட உபதேசங்களில் அதிகமதிகமாய் தேறும்படி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்கிறேன். கர்த்தருடைய வருகை வர மிகுந்த ஆவலோடு காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையற்றவர்களுமாய் சமாதனத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருங்கள். சமாதானத்தின் தேவன் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் இருப்பதாக, ஆமென்.

டிசம்பர், 2000

***கிறிஸ்துவின் அன்பில்,***
**சகோ. காலேப் யோசுவா**